சக்ரவர்த்தினி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை."

VOL. VI.	MADRAS, FEBRUARY 1911.	NO. 7,
தொகுதி ௬.	சென்னை, பிப்ரவரி௴ 1911.	பகுதி ௭,

தைரியம்.

"தைரியம் தலைகாக்கும்" என்று வழங்குகிற உலக வசனம் பொய்யல்ல. ஒருவனுக்குத் தைரியத்திலும் நன்மை தருங்குணம் எதுவுமில்லை. உலகத்தில் அரிய பெரிய காரியங்கள் தைரியவானாலேயே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஸ்திரீகளிலும் தைரியமுள்ளவர்கள் அநேக காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். இவைகளன்றிப் பிரத்தியட்சத்திலும், தைரியமுள்ளவர் தாமெடுத்துக்கொண்ட செய்கையில் முற்றுப்பெருவதைக்காண்கிறோம். ஒருவன் எத்துணைப்பலமுடையவனாக விருந்தாலும் தைரியமென்பதில்லையாயின் அவன்பலத்தால் அவனுக்கொரு பிரயோஜனமுமில்லை. பணமும் கல்வியும் தைரியத்தைப்போல் வேலை செய்யா. ஆபத்து நேருங் காலத்து எவன் தைரியத்தை இழக்காமலிருக்கிறானோ அவனே அவ்வாபத்தினின்றும் தப்புவான். தைரியமிழந்தானாயின் தப்புவதரிது. தைரியம் எவனிடத்து நிலைத்திருக்கிறதோ அவனிடத்து அறிவும் சமயோசிதமான யுக்தியும் தானே ஏற்பட்டு மிக்க பயனைச்சமயத்தில் உதவும். தைரியவானுக்கு அவன் கைச்சிறுதடி பயன்படுவதுபோல் கோழைமனதுடைய ஒருவனுக்கு அவன்றன் கைக்கொண்ட கூரியவாளும் பயன்படாது. இப்பொழுது நம்மவர்களில் அநேக ஆடவர்கள் ஒரு பெரிய எருமைக்கடாவைத்தூக்கி அப்படியே தோளிற்போட்டுக்கொள்ள சக்தியுடையவராக விருந்

துப், இரவில் வெளியேவர அவசரம் நேர்ந்த சமயங்களில் வெளிப் பட மனேதைரியமில்லாமல் தங்கள் மனைவிகளைத் துணைக்கழைத்துக் கொண்டு வெளியே வந்து காரியத்தை முடித்துக்கொண்டு பின் உட்செல்வதையும் காண்கிறேமல்லவா? இப்படி நம்மவர்களிற்பெரு ம்பாலும் காணப்படுவது, சிறுவயதுமுதல்தைரியமின்னதென்பதை யறியாமல், பரீக்ஷையில் தேறி எவ்விதத்திலும் ஓர் உத்தியோகம் பெற்று பிறருக்கடிமையாக விருக்கவேண்டுமென்கிற அவாவின் பொருட்டுப் படித்துத் தங்கள் கருத்துப்படி உத்தியோகத்திலமர் ந்து பட்டணவாசஞ்செய்து வருபவர்களிடமென்றே சொல்லலாம். இவர்கள் என் செய்வார்கள்? சிறுவயது முதல் இவர்கள் கண் பார் ப்பது புஸ்தகம். கைபழகுவது எழுதுகோலுடன், கால் செல்வது பள்ளிக்கும் வீட்டுக்குமுள்ள தூரமேயாகும். இப்படியிருக்கின் இவர்கள் எங்ஙனம் தைரியம் என்பதைப்பெறுவது? ஒருவனுக்குத் தைரியம் இயற்கையில் ஏற்படுமென்பதில்லை. இயற்கையிலிருப்பது சிறிதளவிலேயே நிற்கும். அது, வயது முதிர்ந்து அறிவைக்கொ ண்டு உலகப்பொருளையும் உலகநடவடிக்கைகளையும் அறிந்து இது இத்தன்மையது இதுஇத்தன்மையது என்று தேர்ந்துவரும்போதே வளர்ந்து கொண்டுவரும். பாருங்கள்! ஒரு குழந்தைக்கு ஒருஇருட் டுள்ளைக்காட்டி இங்குபூச்சியிருக்கிறது போகாதே என்றுகூறிவரின் அது அங்குபோவதில்லை. அக்குழந்தை சிறிது அறிவைப்பெற்று அந்த அறையில் ஒருமுறை நுழைந்து விடுமாயின்பிறகு இன்னெரு முறை அங்கு செல்ல அஞ்சாது. இப்படியே ஒவ்வொன்றிலும் தைரியப்பட்டுவரின் நாளடைவில் தைரியம் பெருகும். தற்காலம் பட்டணவாசங்களிலிருந்து படித்து வரும் சிறுவர் சிறுமியர்களு க்கு உலகசுபாவங்களையறிந்து தைரியம்பெறமார்க்கமில்லாமற்போய் விடுகிறது. ஐரோப்பியர்கள் தங்கள் குழந்தைகளைப் பழக்குவது நம்மிலும் மாறுபாடாகவே யிருக்கும். அவர்கள் சிறுவர்களுடைய மனதில் கோழைத்தனம் பிடிபடாவண்ணமே பழக்குவிக்கிறார்கள். உதாரணமாக-நாம் ஒருமுறை இச்சென்னையின்கண் மூர்மார்க்கெட் என்று சொல்லப்படும் மார்க்கெட்டுக்குச்சென்றிருந்தோம். அங்கு

ஒரு ஐரோப்பியன் தன்னுடைய 6 வயது பையனை விளையாடுவதன் நிமித்தம் உற்சவகாலங்களில் ஏற்படுத்தப்படும் குடைராட்டினத்தி லிருக்கும் குதிரைமேலேற்றிவைத்துக் கையைக்கெட்டியாய்ப்பிடித் துக்கொள்ளும்படி சொன்னான். பையன் அவ்வாறே அதன்மேலுள்ள கம்பியை இறுகப்பிடித்துக்கொண்டான். உடனே ராட்டினம் சுழல ஆரம்பித்தது. வரவரக்கண் பொரிதட்டச்சுழன்றுகொண்டே போயி ற்று. குதிரையிலிருந்த பையன் சிறிதும் அஞ்சாமல் புன்சிரிப்புடன் சென்றான். இதைக்கண்ணுற்ற எமக்கு அளவிலடங்காத ஆச்சரியமு ண்டாயிற்று. நமது குழந்தைகளை நாம் அவ்விதஞ்செல்ல இடங்கொ டுப்போமா ? அல்லது நம்குழந்தை அதில் உட்காரத்தான் துணி யுமா ? பாருங்கள் ! ஐரோப்பியர் தங்கள் குழந்தைகளுக்குத் தை ரியமுண்டாக்கும் விதத்தை. ஆகவே தைரியத்தைப்பெறவேண்டிய தும் அதை எச்சமயத்திலும் சோரவிடாதாண்டு வரவேண்டியதும் அவசியம். இதனை ஔவைப்பிராட்டியார் ஆத்திச்சூடியில் "ஊக்க மதுகைவிடேல்" என்று போதித்திருப்பதைக்கண்டு தெளிக.

தைரியலட்சுமியின் கடாக்ஷமிருந்தால் எக்காரியமும் கைகூ டும். "ஊக்கமுடைமை யாக்கத்திற்கழகு" என்று கொன்றைவேந்த னில் எழுந்த அமுதத்திருவாக்கும் தைரியலெட்சுமியின்கடாக்ஷமகி மையை விளக்குதற்கேயாம். இதுவன்றிக் குறளில்,

"உடைய ரெனப்படுவதூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று"

என்றார் நாயனார். அதாவது ஒருவரை உடையரென்று சொல் லச்சிறந்தது ஊக்கம்; அஃது இல்லார் வேறுதாமெதுடையவரே னும் உடையரோ என்பதாம். கருத்து யாதெனில் ஊக்கமுடைய வனேஎல்லாமுடையவன்; அதில்லாதவன்மற்றெதுவுமில்லாதவனே என்பதாம். ஆகவே ஒருவன் ஊக்கமுடையவனாயிருப்பானாயின் எல் லாந்தானே எய்தும் என்பது கொள்ளத்தக்கது. இதுவன்றி ஊக் கம் அதாவது உள்ளக்கிளர்ச்சியுடையவன் வெல்லும் திறமையுடை யவனாவன் என்பதை,

"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக்குறின்"

என்று விளக்கினர். அதாவது யானை பெரிதும் கொம்புடையதுமாயினும் புலியடிக்கு அஞ்சும் என்பதாம்.

தைரியத்தின் மகிமை இத்தன்மைத்தாதலின் எவரும் தைரியத்தைத்தளரவிடாது மேன்மேலும் தழைத்தோங்கும் நிலைமையிலிருந்து உலகவாழ்வைச்செலுத்தவேண்டும். இல்லையாயின் எல்லாமில்லை. இதனையுணர்ந்து "தைரியந்தலைகாக்கும்" என்பதை மறவாதொழுகுவதே கடமையாம்.

பக்தி.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களிலும் வீடு என்னும் மோக்ஷமே பரமபுருஷார்த்தம். இந்த வீட்டையடைவதற்கு அநேகவழிகள் உள. வைதிகாதிஸத்கர்மங்களனைத்தும் மறைந்தும் துஷ்கிருத்யங்கள் மேலிட்டும் உள்ளது இக்கலியுகம். ஆதலால் இப்பொழுதுள்ளஸாமான்ய ஜனங்களுக்குச் சித்தசுத்தியென்பது கிடையாது. சிலர்ஸாதுக்களாகவிருந்தாலும் காலபேதத்தால் அவர்களுடையமனமும் பேதப்படுமென்பதுநிச்சயம். இவ்விதஇடையூறுகளையெல்லாந்தாண்டி ஒருவன் மோக்ஷமடைய விரும்புவானாகில் இதற்கு ஸாதனமானவழியைப்பலசொல்லி இவன்மனதைஒருவழிப்படாமல்செய்துவருகிறார்கள் அதாவதுசிலர் முத்திக்குக்காரணம்மோக்ஷம்என்றும் இன்னும்பலர்தவமேமுக்கிய காரணமென்றும் மற்றும்சிலர் யாகம்செய்யவேண்டுமென்றும்வேறு சிலர்தானமே முக்கியஸாதனமென்றும் வேறுபலர் விருதாதிகளை யனுஷ்டிக்க வேண்டுமென்றும் புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதேசரியென்று சிலரும் வேறு சிலர்ஸ்தலவாஸந்தான்உயர்ந்ததென்றும் மற்றவர் அஷ்டாங்கயோகஞ் செய்தாலல்லதுசித்தியாது என்றும் சிலர் வேதாந்த சிரவணஞ்செய்ய வேண்டுமென்றும் சிலர்

மனனஞ்செய்ய வேண்டுமென்றும் அல்லது மூர்த்தியுபாஸ்திசெய்ய வேண்டுமென்றும், மற்றும் சிலர் ஸத்ஸங்கஞ்செய்ய வேண்டும் என்றும் பலவிதமாகச் சொல்லுகிறார்கள்.

இப்படிச் சொல்லிய ஒவ்வொன்றையும் செய்வது மஹா சிரமமான காரியம். அப்படிப்பட்ட கஷ்டங்களையுங் கருதாமல் இவைகளை யெல்லாம் அனுஷ்டித்தவனும் மறுபடியும் மறுபடியும் ஜனன மரண ரூபமான ஸம்ஸாரசாகரத்தில் மூழ்கிவருகின்றான். முற்கூறிய நற்கருமங்கள் யாதுஞ் செய்யாத ஒருஜடன்ஒருமுயற்சியுமின்றி முத்தியடைகிறான். இதுநம்முடைய புராணங்களால் தெரிந்த விஷயமே. இதை அர்த்தவாதமென்று கூறுவாருமுளர். அப்படிக் கூறினல் அப்பொழுது அதற்குவிடையளிக்க நாம் முன் வரக்கூடும்.

ஆகையால் அப்படிப்பட்ட மோக்ஷமென்னும் பரமபுருஷார்த்தத்தையடைய பிரதிமனிதனும் முயற்சிக்க வேண்டுவ தவசியம். அதற்குப் பரமோபாயம் ஒன்றுளது. இதைத்தவிர சுலபமான உபாயம் கிடையாது. இதற்கே பக்தியென்று பெயர்.

வரும்

S. ராஜாசாஸ்திரி.

சில திருத்தங்கள்.

ஒரு தேசமானது செழிப்புற்று விளங்கவேண்டுமானல், அத்தேசத்தாரிடம், ஐக்கியபாவம், தேசாபிமானம், பரஸ்பர நம்பிக்கை, சுயநலம் கருதாமை, (தேசத்துஜனசமூகத்தின் க்ஷேமலாபங்களைத் தம்முடையதாகப்பாவித்து நடத்தல்) இத்தியாதிகுணங்கள் இருக்கவேண்டியது அத்யாவசியகமாம். நம்மை ஆளும் மேனாட்டவரிடம் இக்குணங்கள் (கூட்டுவியாபாரம், ரகஸ்யமான விஷயங்களை

யும் வெளியிட்டு எல்லோரும் லாபமடையும்படி செய்தல், தேசத்தாரின் கட்டுப்பாட்டின் வரம்பை மீறுதிருத்தல் முதலியன) குடிகொண்டிருப்பதால்தான், அத்தேசத்தின் வளப்பமும், செல்வப்பெருக்கும், கல்வி அபிவிருத்தியும், உலகத்திலுள்ள சந்துபொந்துகளிற் கூட பரவியிருக்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல, நன்குவிளங்கும். நம்தேசத்திலோ அத்தகைய ஒற்றுமையும், நம்பிக்கையும், உண்டாவது புலிப்பாலாக இருக்கிறது; ஆதலால், நம்தேசத்திற்கு, முக்கியமான விஷயங்களை வெளியிடுவதற்கும் அதனால் ஜனங்கள் நன்மையடைவதற்கும் பத்திரிகையே சாதனமென்று சொல்லவேண்டும். தற்காலம் பணப்பெருக்கும், செலவும்,மிகுதி என்றாலும் விதரணை இல்லாமல் வீணாகிவிடுகிறது. தேசமாதாவுக்கு சிரோரத்தினமாய் விளங்கும் கிராமவாசிகளான விவசாயிகளுக்கு, நிஷ்பிரயோஜனமான செலவைக் குறைக்கவும், நவீனரீதியை யறிந்து அதன்படிசெய்து லாபமடைவதும், அருமையாகும். ஆகையால் அப்படிப்பட்ட விஷயங்களைப் பரவச்செய்வதற்கு அடியிற்கண்ட சீர்திருத்தங்கள் செய்தல் அவசியம். அவை வருமாறு.

1. கிராமத்திலுள்ள பெரிய (அல்லது பொதுவாக) மிராசுதார்கள் ஒன்றுசேர்ந்து பொது நன்மையான காரியங்களுக்கென்று ஒருகட்டடம்கட்டல்.

2 எந்தக்காரியம் செய்யவேண்டியிருந்தாலும் மேற்படி கட்டிடத்தில் கிராமத்தார் ஒன்றுகூடி ஆலோசித்து நடத்தல்.

3 ஒவ்வொருகிராமத்திலும் உண்டாகும் லாபம் நஷ்டம் அந்தந்த கிராமத்து ஜனங்களைச் சேருமேயொழிய வேறில்லை. ஆதலால், தண்ணீர்ச்சண்டை என்னும் யுத்தத்தில் வீணாகப்பணத்தைச்செலவுசெய்து கிராமத்தின் கௌரவத்தையும் செல்வத்தையும் குறைக்காமல் அவரவருக்கேற்றபடி (பொறுமையுடன்) பாய்ச்சிக்கொண்டு ஒற்றுமையோடிருத்தல்.

4 ஒவ்வொரு மிராசுதாரிடமும் வேலியொன்றுக்கு ரூபாய் ஒன்றுவீதம் வசூல்செய்து, பிழைக்கும்வழி தென்னிந்தியா விவசாயம், விவேகபோதினி, வித்யாவிஹாரிணி முதலான (நமதுதேசக்ஷேமத்தைக்கோரி நடத்தப்பட்டுவரும்) மாதச்சஞ்சிகைகளையும் சுதேசமித்திரன் முதலிய வர்த்தமானப்பத்திரிகைகளையும், விவஸாயபோதினி, விவஸாயவிளக்கம், இத்தியாதி புஸ்தகங்களையும் வரவழைத்து, மேற்சொல்லிய பொதுக்கட்டிடத்தில் எல்லோரும் வந்து படிக்கும்படி கட்டாயப்படுத்தல். இதில் கூறியவைகளை படிப்பதால் கைத்தொழில் ஜீவன உபாயம் விவசாயஞானம், வியாபாரம், நன்னடக்கை, விவேகம், தெய்வபக்தி, மனஸ்ஸந்துஷ்டி, ஜீவகாருண்ணியம், காலசுபாவம், லோகவர்த்தமானம், பணம்சேர்க்கும் உபாயம் முதலியபலவித நன்மைகள் உண்டாவதால், இஹத்தில் சகலக்ஷேமத்தையும் பரத்தில்மேலான பதவியையும்அடைவார்கள்.

5 கிராமத்தலைவரான மிராசுதார் (அல்லது கிராமமுனிசீப்) கிராமவாஸிகளிடம் படிப்பின் நலத்தை எடுத்துக்கூறி அவரவர்சக்திக்குத்தக்கபடி பணம்வசூல்செய்து முன்சொல்லிய பொதுக்கட்டிடத்தில் பாடசாலை யொன்றேற்படுத்தி தேசபாஷையும், ஆங்கிலமும் கற்ற ஒருவர், அல்லது இருவரை உபாத்தியாயராக நியமித்து சிறுவர் சிறுமிகள் இருபாலரையும், படிக்கும்படி வற்புறுத்தல்.

6 விவாகாதி சுபகாரியங்களில் ஊரார்மெச்சும்படி (வீண்டம்பத்தைக்கருதி) உள்ள நிலத்தையுமழித்துக் காசைக்கரியாக்கிக் கடன்பட்டுப் பரிதவிக்கும்படியான செலவுசெய்யாமல் கூடியமட்டிலும் விதிவிலக்கை அனுசரித்துப் பணச்செலவுசெய்தல் (சாஸ்திரவிதிகளை யோசித்துப்பார்த்தால் நமது நன்மையைக்கருதியே முன்னோர் செய்ததாகப்புலப்படும்).

7 பெண்களுக்கு விவாகத்தை அதிபாலியத்தில் செய்யாமலும் தர்மசாஸ்திரத்தின் வரையறைகடவாமலும், அவரவருக்குத்

தகுந்த குணம், கல்வி, ரூபம், செல்வம், இவற்றில் பிடித்தமுள்ள னவாவென்று அறிந்து, அவர்கள் விருப்பத்தை அனுசரித்து ஆட வர்க்கு பாணிக்கிரஹணம் செய்வித்தல்.

8 வரதக்ஷிணை என்னும் கொடியவழக்கத்தை நிறுத்திவிடல். (சாஸ்திரவிரோதமாயும் ஜனக்ஷேமஹானிகரமானதுமான இந்த ஏலங்கூறும் துர்வழக்கத்தை நாகரிகம் மிகுந்த ஆரியர்கள் ஏன் கையாடவேண்டும் ?

9 அந்தந்த கிராமத்து ஏழைஜனங்களை வெளித்தேசங்களுக்கு அனுப்பாமல் பார்த்து வருவதன்றி, அவரவருக்கு ஏற்றபடி சமீபமான விடங்களில் வேலைசெய்துவைத்து ஜனவிர்த்திகரமான முயற்சியைச் செய்தல் (இது மிகவும் சிறந்த தர்மமாகும்)

10 ஜனங்களுடைய நன்மையைக் கோருவதாகப்பேர்மாத்திரம் வைத்துக்கொண்டு பிரஜைகளுடைய பணத்தை உறிஞ்சும் விவாகமரண சகாய சங்கம், லாட்டேரி (Lottery) முதலிய மோசகரமான செய்கையில் கவர்மெண்டாரைக்கவனிக்கும்படி செய்தல்.

11 கிராமத்தில் களவு போகதிருக்க வேண்டி. கேடிப்பேர்வழிகளையும், வரவுக்குமிஞ்சி செலவுசெய்வோரையும், அடிக்கடிகவனித்து மேலதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு செய்தல் (இதனுல் சூதாட்டம், மாடுபிடித்தல், முதலிய தீச்செயல்கள் ஒழிந்துவிடும்; இதற்கு கிராமமுனிசீப் அவர்களே பாத்தியப் பட்டவர் ஆவர்.)

12 குடியால் வரும்துன்பத்தை எடுத்துக் கூறி, கூடுமானவரை திருத்தமுயல் (இதுவிஷயத்தில் காருண்ணிய கவர்ன்மெண்டார் அவர்கள் அருமையானதோர் சட்டம் ஏற்படுத்தல் அத்தியாவசிகமாம். தன்னை நேசிப்பவனைக் கெடுப்பதன்றிப் பின்வரும் சந்ததியாரையும், எரிக்கும் நெருப்புப் போன்றதான இம்மதுவை இந்து தர்மசாஸ்திரத்தில் பஞ்சமகாபாதகத்தில் ஒன்றாகக் கூறப்பட்டிருப்பதும் இக்காரணம்பற்றியே.)

13 அந்தந்த பூமியின் சாரத்தை அறிந்து அதற்குத் தகுந்த விருக்ஷங்களைவைத்து விருத்திசெய்தல்-இதனால் நாடுவளப்பமும் மழையும் அதிகப்படுமென்பதோர் சிறந்தகொள்கை.

14 சுகாதாரத்திற்குக் காரணங்களான, ஏரி, குளம், முதலானஜலதாரங்களைச்சுத்தமாகப் பாதுகார்த்தல்- இதனால், காலராமுதலிய கொள்ளை நோய்கள் அணுகாதிருக்க வழியுண்டு.

15 தக்கபண்டிதரைக் கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் சென்ற விவசாயாதி முக்கியமான விஷயங்களைக் குறித்து உபன்யாஸிக்கச்செய்தல்.

16 கிராம தேவதைகளுக்கும் சிவவிஷ்ணுவாதி ஆலயங்களிலும் பூசைமுதலியன சரிவரநடத்தல்.

17 இரவில் இராமாயணம், பாரதம், பாகவதம், முதலிய சரித்திரங்களைப் படிப்பித்தல் (இதனால்இதிஹாஸஞானமும், கடவுளிடத்து அன்பும், அதன்மூலமாய் சகல நன்மைகளுமுண்டாவதோடு கொடிய செய்கைகளும் நீங்கி, மனச்சுத்தி யுண்டாகும்.

19 கிராமப்பஞ்சாயத்தார் ஏற்படுத்தி சில்லரைவழக்கு (விஷயங்களை) தீர்த்துக்கொள்ளலாம்.

20 ஜனசமூகத்திற்கு அவசியமான காரியங்களை கிராம பஞ்சாயத்தார் மூலமாய் ராஜாங்கத்தாருக்குத் தெரிவித்து அவர்களுடன் ஒத்துழைத்து ராஜவிஸ்வாசத்தையும் பெர்துஜன நன்மையையும் விரும்பல். இவைகளே.

இராமபத்ரசர்மா.

கல்வியும் குடும்பப்பெண்களும்

இப்பொழுது ஆண்பிள்ளைகளை ஐந்து வயதானதும் அக்ஷராப்பியாசம் செய்வித்துக் கல்விபயில பள்ளிக்கனுப்புவது போல பெண்பிள்ளைகளையுங்கூட ஐந்தாவது வயதில் பள்ளிக்கனுப்பிக் கல்விபயிலச் செய்வது சர்வசாதாரணமாக இருப்பது யாவரும் அறிந்த விஷயமே. பெண் கல்வியில் ஓர் ஊக்கம் உண்டாகிப் பெற்ஞேர்கள் தங்கள் பெண்களுக்குக் கல்விப் பயிற்சி செய்யாமல் போனல் தங்களுக்கு இழிவெனக்கருதி கல்விச்செல்வத்தை ஊட்டுகிருர்கள். இவ்வித ஊக்கம் உண்டாயிருக்கிறதும் சாக்ஷாத் ஜெகதீசன் செயலே! இவ்விதம் செய்வதில் சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளைப் பகலில் குறிப்பிட்ட நேரங்களில் பள்ளிக்கனுப்பவும் மற்ற நேரங்களில் சிறிது மறுதினத்திற்கு வேண்டிய பாடங்களைப் படிக்கவும் மற்றும் சிறிது நேரம் வீட்டு வேலைகளைச் செய்யவும் செய்து வருகிருர்கள். சில தாய்மார்கள் படிப்பையே பிரதானமாகக் கொண்டு பெண்களுக்கு வீட்டு வேலை யின்னதென்றும். குடும்பத்தை நடத்தவேண்டிய விதம் யிவ்விதமென்றும் போதிக்காமலே புத்தகமும் கையுமாக இருக்கும்படி விட்டு வருகிருர்கள். மற்றும் சில ஆசாரத்திருத்தத்தில் சேர்ந்த தாய்தகப்பன்மார்கள் தங்கள் பெண்களுக்கு 18 அல்லது 20 வயதுக்கு மேல்தான் கல்யாணம் செய்ய வேண்டுமென்றும் அதுவரையில் கல்வி பயில வேண்டுமென்றும் ஆங்கில் முதலானவைகள் கற்றுக் கொடுத்து வருகிருர்கள். இம்மூன்ரும் வகுப்பாரைப்பற்றிச் சமயம் வாய்ந்தவிடத்து விஸ்தாரமாய்ப் பேசுவோம். நிற்க:—முதல் இரண்டு வகுப்பாரைக் குறித்து இங்கு கவனிப்போம்:—இந்த இரண்டு வகுப்பாரும் பெண்களை 10, 11-அல்லது 12-வயது அதாவது ருதுப்பருவம் அடையும் வரையில் பள்ளிக்கு அனுப்புகிருர்கள், இதில் முதல்வகுப்புப் பெண்கள் கல்வி வீட்டுவேலை இரண்டையும் பயின்று புருஷன் வீட்டுக்குவந்ததும் புருஷன் மாமியார்

முதலானவர்களுக்கு யாதொரு மனஸ்தாபமுமின்றி வீட்டுவேலைகளைச் செய்தும் பிறகு ஒழிந்த நேரங்களில் வீட்டிலிருக்கும் மாமியார், அக்கம்பக்கத்துப் பெண்கள் கேட்டு மகிழும் படிக்கும், காலை நேரங்களில் வீட்டில் செய்த வேலையின் சிரமம் நீங்கிச் சந்தோஷமாய்க் காலம்கழிப்பதற்கு ஹேதுவாயும், தாங்களும், தாங்கள் படிக்கக்கேட்பவரும்படிக்கும்விஷயங்களிலிருந்து நற்குணநற்செய்கைகளை கிரகித்துக்கொள்ளும் பொருட்டும் இராமாயண மகாபாரதங்களாகிய புராணங்கள் அல்லது வேடிக்கை விநோதக் கதைகள், வர்த்தமானப் பத்திரிகைகள் முதலானவைகளைப்படித்து மறுபடியும் மாலையில் வீட்டுவேலைக்குத் திரும்புவார்கள். இவ்விதம் செய்வதினால் தங்களுக்கும் தங்கள் வீட்டிலுள்ளவர்களுக்கும் அக்கம் பக்கத்துஸ்திரீகளுக்கும் வெகுசந்தோஷமுண்டாகும். இஃது இப்படியிருக்க இரண்டாவது வகுப்புப் பெண்களைச்சற்றுக் கவனிப்போம்:—இப் பெண்களோ 12-வயது வரையில் வீட்டு வேலை இன்னதென்று தெரியாமல் எப்பொழுதும் புத்தகமும் கையுமாகவே இருந்து வருகிறபடியால் புருஷன் வீட்டுக்குப்போனதும் வீட்டு வேலைசெய்ய மனம் நாடுகிறதில்லை. புருஷன் தனவந்தனாயிருந்து வீட்டு வேலைசெய்வதற்கு சமையற்காரர்களும், இதரவேலையாட்களும் நியமித்திருந்தால் இவர்களும் புத்தகமும் கையுமாக இருக்கலாம். உலகத்தில் எல்லாரும் தனவந்தர்களாக இல்லையே. பெரும்பாலரும் வேலையாட்களை நியமிக்க சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். இப்பெண்கள் இவ்விதக் குடும்பத்திற்குள் புகின் முதலில் வீட்டு வேலை ஒன்றும் தெரிகிறதில்லை. தெரியாததினால் மாமியார் புருஷன் இவர்களின் நிந்தனைக்குள்ளாகிறார்கள். ஏதோ மாமியார் இருக்கும் வீடாயிருந்தால் அவளாவது வேலைகளைக் கற்றுக்கொடுப்பாள். அதல்லாது தற்கால ஆங்கிலப்படிப்பின் பயனாக தாயார் ஒருபுறமும் தகப்பன் ஒருபுறமும், பிள்ளைகள் ஒருபுறமும் உத்தியோகத்தினிமித்தமாக இருக்க நேர்ந்திருக்கிறதே. இவ்விதமிருந்தால் கட்டினபுருஷன் பாடு அம்பலந்தான். சாப்பாடுசெத்தன்று வரவேண்டுமென்றால் பத்தன்றுதான் கிடைக்கும். இவனும் கச்சம்

கட்டவேண்டித்தான் நேருகிறது. இவன் வயிற்று வளர்ப்பு உத்தியோகத்தையே கவனிப்பானு அல்லது சமயல் வேலையைக் கவனித்துப் பெண்சாதியை உட்காரவைத்துப் பாதபூஜைசெய்து சாப்பாடு போடுவானு? இவ்விதம் அக்கப்போரெடுத்துச் சிறிது கற்றுக்கொண்ட பிறகுதான் வீட்டுவேலைகளைக் கவனிப்பானு! மாட்டான். இவ்வேலை செய்வதென்றால் விஷமாயிருக்கிறது. ஏனெனில் சிறுவயது முதல் படிப்பிலேயே பழகிவிட்டபடியால் இதில் மனம் நாடுவதில்லை. இருந்தபோதிலும் தீராமல் வேறு ஒருவரும் இல்லாததினுல் காலையில் எழுந்திருக்கும்போதே புத்தகமோ அல்லது வர்த்தமானப் பத்திரிகையோ ஒன்று எடுத்துக் கொண்டு, ராத்திரியில் 11-மணி வரையில் படித்ததினிமித்தம், காலை எழு அல்லது 8-மணிக்குப் புருஷன் எழுந்திருந்த பிறகு எழுந்துவந்து அடுப்பண்டை உட்கார்ந்து கால் அரைமணிநேரம் படித்துவிட்டுப் பிறகு அடுப்பு மூட்டிப் பாதிபற்றியும் பற்றாததுமாய் எரியவிட்டுக்கொண்டு காப்பியோ காப்பிக்கு வேண்டிய சிற்றுண்டியோ செய்வதற்குத் தண்ணீர் போட்டுவிட்டு அதற்கு வேண்டிய சாமான்கள் ஒன்றும் போடாமல் அதற்குள் ஏதோ பெருத்த நஷ்டம் வந்துவிடுகிற மாதிரி கைவிட்டுக் கீழே வைக்காமலிருக்கும் புத்தகத்தைத் திரும்பவும் சிறிது படித்துப் புருஷன் வந்து, “அடியே காப்பி ஆய்விட்டதா,” என்றுகேட்கும்போது இதோ பொடிபோடுகிறேனென்று தடபுடலாய்ப் புத்தகத்தைக் கீழே எறிந்துவிட்டுப் பொடியைப் போடும் தருவாயில் புருஷன் இது என்னடா கிரஹசாரம் என்று கோபம்வந்தால் இரண்டு அடி அடித்தோ அல்லது வைது கொண்டோ வேறு வேலைபார்க்கப் போகிறுன். இதன் மத்தியில் காப்பீ காய்வதற்குள்ளாகப் பாலைக்காய்ச்சுவோம் என்ற புத்தியில்லாமல் புத்தகம் படிக்கும் ஸ்வாரஸ்யத்தில் அதை மறந்துவிடுகிறுள். இதன் தருவாயில் புருஷன் வைவானே என்கிற பயத்தினுல் காச்சாத பாலை ஊற்றிக் காப்பி தயார்செய்து அதை மாத்திரம் எடுத்துச் சென்று “உப்புமா ஆய்விட்டது கொஞ்சம் இருங்கள்” என்று சொல்வார்கள். இதை நோக்கு மிடத்து அவ

னுக்கு தாடிபற்றி எரியும் சமையத்தில் புகைச்சுருட்டுக்குநெருப் புக் கேட்டாற்போலாகி அதைப்பிடுங்கிக்கீழே கொட்டிவிட்டு சிவா சிவா என்று சொல்லிக்கொண்டு தன்வேலையைக் கவனிக்கப் போய்விடுகிறான். தவிர, அப்படியும் பாலைக் காயவைத்தாலும் அடுப் பில் வைத்து வெகு ரசமாகப் புத்தம் படித்துக்கொண்டிருப்பாள். இதற்குள் பால் பொங்கி அடுப்பில் வழிந்து விடும். இதுதான் இவ்விதமிருக்கிறது என்றால் சமயல் செய்யஆரம்பித்தாலும் சாதம் அரிசியாக இருக்கும் அல்லது குழைந்துவிடும். இரசம் குழம்பு முதலானவைகளுக்கோ உப்புப்போட்டால் புளிஇராது, புளிபோ ட்டிருந்தால் உப்பை மறந்து விடுவாள். ஏனெனில்நாவல்கள் படிக்கி றதென்பது ஒரு பிசாசு. யாரையும் சும்மாவிடாது. ஒருபுத் தகம் ஆரம்பம்செய்தால் அதைப் படித்து முடிக்கும் வரை வேறு ஒன்றி லும்மனம் நாடாது. நாவல் படிக்கும் அநேக ஆண்பிள்ளைகள் கூட இராமுழுவதும் தூக்கமில்லாமலிருக்க நாம் பார்த்திருக்கிறோம். இவ்விதவாக சமையல் செய்து முடித்து எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு, சாப்பிட்ட இடம் கூட சுத்திசெய்யாமலும், வீட்டில் என்ன இருக்கிறது என்ன இல்லையென்றும், எந்தச்சாமான்களில் கல் நெல் இருக்கிறதோ அதைக்கூடப்பார்க்காமலும் புத்தகமும் கையுமாக உட்காருகிறாள். வீட்டுக்கு வேண்டிய சாமான்களைப் புருஷன், தானேபார்த்து வாங் கிவந்தால் தானுண்டு. இப்படிப்பென்னும் பித்தானது சில பெண் களை இவ்வித நிலைமைக்குக் கொண்டு வந்து விடுகிறது. இவ்விதம் விடாமல் படிப்பதினால் வீட்டு வேலைகள்தான் இவ்வளவு லக்ஷண மாக இருக்கிறது; படிக்கிறதினால் தான் ஏதாவது பிரயோஜன முண்டோ என்றால் படித்தது அப்பொழுதே மறந்து விடுகிறது. மேலும் ராமாயண பாரத பாகவதங்கள் எல்லாவற்றையும் நடந்து கொண்டும் நின்று கொண்டும் படிக்கமுடியாது. நாவல்கள் வர்த்த மானப் பத்திரிகைகள் தான் அப்படிப் படிக்கக் கூடியது. சற்று நேரம் படித்து சாரத்தை விழுங்கிச் சக்கையை உமிழ்ந்து விட் டால் அதுவே போதுமானது. இதை விட்டுச் சதாகாலம் படிப்பத

ளுல் ஒன்றும் உறுப்படி இல்லாமல் போய் விடுகிறது. நாம் இவ்வி தத்தீங்குகள் யாவும் படிப்பினுல் உண்டாகிறது என்று சொல்லப் புகவில்லை. பெண்களுக்கு சிறுவயதிலேயே வீட்டுவேலைபைச்செய்ய வும் அத்துடன் ஒழிந்தநேரங்களில் புண்ணியகதைகளைப்படிக்கவும் அதிலிருந்து நீதிமார்க்கங்கள் உணரவும் உணர்ந்து பிறருக்கும் போதிக்கவும் பெற்ருேர்கள் கற்றுக் கொடுக்காமல் படிப்பொன்றி லேயே மனம் நாடும்படியாகச் செய்வதின் பயனுகும். தற்காலத் தில் இவ்விதப் பெண்களை அநேக குடும்பங்களில் பார்க்கலாம் இது மிகவும் பரிதபிக்கத்தக்கதே. இவ்விதமிருக்கும் பெண்கள் வாழும் வீடுகளை நாம் அநேகம் பார்த்திருக்கிருேம். அவைகளில் சாமான்கள் எல்லாம் போட்டது போட்டவாக்கிலேயே கிடக் கும். எந்த எந்த சாமான்கள் எந்த எந்த இடத்திலிருக்க வேண் டுமோ அந்த இடத்திலிராது. வீட்டுப் பண்டங்கள்சிந்திப்போ ளுல் மறுபடியும் அக்குப்பையில்தான் ஒன்ருகச் சேருமே அல் லது சாமானுடன் சேராது. ஒவ்வொன்றும் இவ்விதமே ஆகி றது. குடும்பப் பெண்கள் இவ்விதமிருந்தால் அந்த குடும்பம் எவ் விதம் முன்னுக்கு வருமென்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். இந்தவீட்டில் நுழைந்து பழகி வாழ ஒரு புருஷனுக்கு எவ்விதம் மனம் சகியும். இவைகளை யெல்லாம் யோசித்துத் தங்கள் குமார த்திகளின் க்ஷேமார்த்தங்களை உத்தேசித்தாவது பெற்ருேர்கள் தங் கள் பெண்களை இவ்வித வழியில் பழக்காமல் முதலில் குடும்பங் களை நடத்தவேண்டியவைகளைக் கற்றுகொடுத்துப் பிறகு இதர சத்விஷயங்களில் பிரவேசிக்கச் செய்ய வேண்டியது அவசியம். இதைப் படிப்பவர்களில் மேலே குறித்த இரண்டாவது வகுப்புப் பெண்கள் யாராவது இருந்தால் இன்றுமுதலாவது அவ்விதப்படி ப்பை ஒழித்து வீட்டு வேலைகளைச் செய்து ஒழிந்த நேரங்களில் சத்விஷயங்களைப் புகட்டும் புத்தகங்களைப் படித்து வருவார்களெ ன்று நம்புகிறேம். அவ்விதமே ஜெகதீசன் அருள்புரிவாராக.

குடும்பி

ரசாயன சாஸ்திரமும் அதைக்கற்றவர்களும் தொடர்ச்சி.

ஆனல் இந்தியாவிலோ அப்படி ஒருவரையும் காணேம். பெரும்பான்மையோர் உதர நிமத்தமாகப் பாடுபட்டு ஏதோகொஞ்சம் சம்பாதித்து உயிர் தாங்குகிறார்கள். ஏழையர்களோ மெய்வருத்தப்பட்டு உழைப்பதே கதியாக உடையார்கள். பணக்காரர்களோ முன்னோர்கள் உதவிய பணங்கொண்டு ஏழையரினும் சுலபமாக ஜீவிக்கிறார்கள். மற்று புத்திமான்களுக்கோ, ஒரேவழிதான் தெரியும். பி. ஏ. பட்டம்பெற்றும் சட்டப்பரீக்ஷைக்கு வாசித்துயோக்கியதாபத்திரம் பெற்றும் பற்பல இடங்களில் வக்கீல் புஷ்பங்களாய் மலர்வதே. சிறுபான்மையரே வேறு துறைகளில் இறங்குவது. ரசாயன சாஸ்திரிகளாய்விளங்குபவர்நம்ராஜதானியில் ஒருவரையும் காணேம்- அத்திப்பூ பூத்தாற்போல வங்காளத்தில் பிரபலச் சந்திரராயும் மேற்குமாகாணத்தில் கஜ்ஜருமே சிறந்து புகழ்பெற்றிருக்கிறார்கள். ஆனல் இனி நாம் தயங்குவதற்குத் காரணமில்லை. நம்நாட்டில் இவர்கள் இரண்டுபேர் இருப்பதே இன்னும் அனேகர் அவ்வூற்றுக்குழியில் வேணவா அடங்க அருந்துவார்கள் என்பதற்கறிகுறியாகும்.

நன்று, இரசாயன சாஸ்திரம் கற்றுக்கொடுக்கப் போதுமான அனுகூலங்கள் இல்லையென்பார் ஒருவர். யதார்த்தம். அது ஒருபெருங்குறையே. நம்ராஜதானியில் இச்சாஸ்திரத்தைக்கற்றுக் கொடுப்பதாய் பாசாங்குபண்ணுவது இரண்டு கலாசாலைகள்தான். ஒன்று பட்டணத்திலும் மற்றொன்று விஜயநகரத்திலும் உளது. இன்னும் திருவனந்தபுரத்தில் ஒன்று இருக்கிறது. இவைகளில் கற்கிறவர்கள் தாங்கள்கற்றது எட்டுச்சுரக்காயே யன்றிக்கறிக்கு உதவாது. என்றுணர்ந்து வக்கீல் தொழிலோ வாத்திமைத்தொழிலோ ஏதோ ஒன்றைக் கைக்கொள்ளுகிறார்கள். இதுமிகவும் பரிதாபிக்கத் தக்கதே. சிரமப்பட்டுக் கற்றது அவ்வளவும் விழலுக்கிறைத்த நீராகி

றது. அவர்களைச் சொல்லுவானேன்? படித்தபடிப்பிற்குச் சரியான புகலில்லை. அவர்கள் வரவை ஏற்றுத்தக்கபடி உபசரிப்பாரில்லை. இன்னும் அவர்கள் ஆவசியகத்தை அறிந்து அவர்களால் வரும்பயனை அனுபவிக்க நம்நாட்டார் தெரிந்துகொண்டாரில்லை. ஜெர்மெனி தேசத்தில் என்னயந்திரசாலை யானாலும்சரி; ஒவ்வொன்றும் ஓர் இரசாயன சாஸ்திரியை உடைத்தாயிருக்கிறது. சில சாலைகளில் பலபேர் இருப்பதுமுண்டு. அந்தந்தச் சாலைகளில் நடக்கும் முக்கியமானவேலைகள் சரியானபடி கேடுவராது செய்யப்பட்டுவருகின்றனவாவென்று முக்கியமாய் கவனிப்பதோடு அங்கங்கே கிடைக்கும் கழிவுபொருள்களை வேறு என்ன என்னசுத்தப் பொருள்களாய் ஆக்கக்கூடும் என்று சோதனைப்பண்ணி நூதனவழிகளை சாத்தியமாக்குவதும் அவர்கள் கடமையாகும். அங்கேபோவானேன்; நம் ராஜதானியிலே உள்ள பக்கிங்ஹாம் யந்திரசாலையில் ஒரு இரசாயனசாஸ்திரியிருக்கிறார். நெல்லிக்குப்பம் பாரிகம்பெனியார் சர்க்கரை ஆபீசில் ஒருவர் இருக்கிறார். இன்னும் தென்னிந்திய ஐக்கியத் தோட்டக்காவல்களுக்காக ஒரு இரசாயன சாஸ்திரியைத் தருவித்திருக்கிறார்கள். கொஞ்சநாட்களுக்குமுன் தான் அவர்களுக்கு சோதனைசாலை ஒன்று நிருமிக்க ஆயிரம் ரூபாயும் அதற்கு வருஷாந்திரச்செலவுக்கு ஆயிரம் ரூபாயும் தோட்டக்காவல் கூட்டத்தில் கொடுக்கவேண்டியதாய்த் தீர்மானம் செய்யப்பட்டது. இவைகள் எல்லாம் வெள்ளைக்காரர்கள் ஆதரவில் உள்ளன. இவர்கள் இந்தியர்களுக்கு அந்தமாதிரி வேலையைக் கொடுக்கக் கூடியவர்களே இல்லை. இந்தியர்களால் நடத்தப்படும் இயந்திரசாலைகளில் நாம்கண்டதாக ஒருசாலையிலும் ஒரு இரசாயனசாஸ்திரி கிடையாது. இதுவே அவர்கள் எடுத்துக்கொண்ட காரியங்களில் ஜயமடையாது அழிவதற்குக்காரணமாகும். நம்மவர்கள் அவர்களை ஆதரிப்பது வயலுக்குப் போட்ட உரம்போலே என்று தெரிந்துகொண்டார்களில்லை. இந்த மாதத்து "மாடர்ன் ரிவியூ" என்னும் பத்திரிகையில் இந்தியாவில் கண்ணாடிச்சாலைகளும் அவைகள் அழிவும் என்றவிஷயத்தைப்பற்றி ஓர்வியாசம் வடஇந்தியா நிபுணர் ஒருவர் எழுதியிருக்கிறார். அவர்

முதிர்ந்த அனுபவ முடையவர்போலும். கண்ணாடிச் சாலைகளில் முக்கிய உத்தியோகஸ்தர்கள் இயந்திரமேஸ்திரியும் இரசாயன சாஸ்திரியுமே என்றும் அவர்கள் இரண்டுபேரும் ஒருமிக்க வேலை செய்தால் அல்லாது யந்திரசாலை சரியானபடி ஓடி லாபத்தைக் கொடுக்காது என்றும்தெளிவாய்க்காட்டியிருக்கிறார். அவர் சொல்வது முற்றும் மெய்யே. இருவரும் இரண்டுகண்களே. நம், சென்னப்பட்டணக்கண்ணாடிச்சாலையில் ரசாயனசாஸ்திரி எவரும் இருப்பதாகத்தெரிந்திலது. ஏதாவது சந்தேகம்வந்தால் கலாசாலையில் கற்பிக்கும் உபாத்தியாயரிடம் கேட்டு ஒருவாறு தெளிவடைகிறார்கள். அவர் என்செய்வார் பாவம். புத்தகங்களைத்திருப்புவார். அப்படிச் செய்துபார் இப்படிச்செய்துபார் என்று சொல்லுவார். வேலையிலமர்த்தப்பட்ட ரசாயனசாஸ்திரியானால் சாலையிலுள்ளகுணதோஷங்களை ஆராய்ந்து அவற்றுக்கு வேண்டிய சிகிச்சைகளைச்செய்து சரியான உதவி புரிவார். இப்படி ஒருவர் நம்பட்டணத்து யந்திரசாலையில் இல்லாதது பொறுக்கமுடியாத ஒரு பெருங்குறைவே.

ரசாயனத்தந்திரங்களை மேல்நாட்டார் நமக்குக் காண்பித்து நம்மைத் தேர்ச்சியடையப் பண்ணப்போகிறதேயில்லை. நாமே முதிர்ந்து பழகவேண்டியதுதான். எப்பொழுதும் பழக்கவைப்பது அவ்வளவு சுகப்படாதல்லவா? ஆகையால் மேற்சொன்ன கலாசாலையில் படிக்கும்மாணாக்கர்களை உற்சாகப்படுத்தி அவர்களைக் கவரும் வண்ணம் சம்பளம் கொடுத்து நம் இந்திய யந்திரசாலைகளில் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குவேண்டிய சௌகரியங்களைச் செய்தால் இரண்டுபேர்களுக்கும் நல்ல லாபமும் புகழும் கிடைக்குமென்பது நிச்சயம்.

இவ்வாறு இரசாயனசாஸ்திரம் இன்னது என்பதையும் அதை கற்றவர்கள் இந்தியாவின் தற்கால நிலைமையில் எவ்வளவு அத்தியாவசியமென்பதையும் காட்டியதை இத்துடன் நிறுத்துவோம். நமது யத்னங்களில் எல்லாம் வல்ல கடவுள் நமக்குத் துணைபுரிவாராக.

K. C. V.

HONESCY IS THE BEST POLICY,,

"உண்மையொழுக்கம் நல்லொழுக்கம்"

நற்செயலியற்ற ஆதாரமாயிருப்பனவற்றில் உண்மையுடைமை ஒன்றாகும். மண்ணிற் பிறந்த எண்ணுதற் கரிய மானிடரனைவருக்கும் உண்மையுடைமையின்றியமையாததான நற்குணம். ஈஸ்வரரை நம்பி, நன்மை நாடி, புன்மை போக்கி அழிதற் குரிய உடலும் பொருளும்அநித்திய மென்கிற தேற்ற உணர்ச்சியுடன் ஈசனளித்ததை ஏற்றுக்கொண்டு, சன்மார்க்க முறைப்படி நடப்பவனே உண்மையொழுக்கமுள்ள உத்தமனென்று கூறலாம். அத்தகைய நற்குணசாலிகளே நற்செயலின் பயனை ஈவதற்கும் ஏற்பதற்கும் யோக்கியதை யுடையவராவர். அவர்களே இன்னா செய்தார்க்கு இனியவே செய்வர். தீயனவோட்டி நல்லன நாட்டுவர். தக்கவையிபற்றித் தாகாதவை யகற்றுவர். அவர்களே உள்ளும் புறம்பும் ஒருங்கே யிணைத்துத் தூயோரென்று வாயாறப் புகழப் பெறுவர், அவர்களே "அவனன்றியோரணுவு மசையாது" இன்றைக்கிருப்பாரை நாளைக்குக் காணோம்" 'ஊழின் பெருவலியாதுள' என்கிற கட்டுரைகளை நன்கறிவர்.

மேலும் செய்கையோடு வாக்கிலும் நேர்மையுடைமை அவசியம். மனம், வாக்கு, காயம் மூன்றிலும் நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும். நம்மைக்கூண்டிவிட்டுப் பூட்டினாலும் புனலிவிட்டு ஆட்டினாலும், அனலிவிட்டு வாட்டினாலும், நமதுதேகத்தை துண்டமாகக்கூறுபடுத்தினாலும் மற்று எவ்விதமேனும் துன்பப்படுத்தினாலும்உண்மை நெறி தப்பி நடக்கலாகாது. சத்தியம் பிறழாமை மேற்கொள்ளும் புருஷோத்தமர்களே பாக்கியசாலிகள்: பாண்டவர்க

ளில் தருமமே உருவமெடுத்து வந்ததென்ன பொறுமைக்களஞ்சிய மாகிய தர்மபுத்திரர் சூரையாடி, நாடிழந்து, காடடைந்து வனவாசம் அஞ்ஞாத வாசங்களைக் கழித்த போதும், துரியோதனுதியர் வருந்திய போதும் மற்றச் சமையங்களிலும் உண்மைநெறி கலங்கினரோ ?

அன்றியும் மன்னுயிரைத்தன்னுயிராகப் பாவித்து சத்திய மெனுங் கொடியை நாட்டிய அரிச்சந்திரன் பதியிழந்து பாலனையிழந்து, மனையிழந்து, விசுவாமித்திர மஹாரிஷியின் சூட்சியால் பலவேறு இடையூறுகளை யடைந்தும் சத்தியம் பிறழாமல் காத்துப் பிறகு சௌக்கிய மடைந்தானன்றோ ? அன்றியும் உண்மை யுடைமையின் பயனையும் அவசியத்தையும் வற்புறுத்தும்நீதிகளையுடைய கதைகளை நாம் ஆங்கிலேய புத்தங்களிலும் நமது வாசக புத்தகங்ளினும் படிக்கிறோம்.

இதற்கு மாறுபாடக சிலர் அகம்பாவம் சுயநயம் பாராட்டல் முதலிய தீயவழிகளிலேயே பழகுகின்றனர். அவர்கள் தீயோரை யண்டித் தீயவழிகளைச் செய்வர் ; காலத்திற்கேற்ற கோலம் போடுவர், பொய்மொழி பகருவர், பொய்ச்சாக்ஷியங் கூறுவர். உள்ளதை மறைப்பது எள்ளளவும் தகாத காரியம். அவ்விதம் உண்மையை ஒளிப்பதனுல் தீமையே சம்பவிக்கும் 'பொய் சொன்ன வாய்க்குப் போஜன மகப்படாது' என்ற பழமொழியு முண்டல்லவா ? எனவே நாம்நிகழ்வைதனைப் புகழாமலும் இகழாமலும் கறந்தபால் கறந்தபடி உண்மையையே பேசவேண்டும்.

மேற்கூறிய நற்குணங்களுக்கும் தீக்குணங்களுக்கும் குருநாதர் நமது மனச்சாட்சியேயாம். நமது மனச்சாட்சி தீயசெயல்களையும் தீயசொற்களையும் மொழித்து நற்செயல்களை இயற்றவும் தூயமொழிகளைப் பகரவும் வற்புறுத்து கின்றது. கடைப்பட்டதான நமது மிருக சுபாவ (Animal nature) மானது தீய வழியிலிருந்து

நேர்மையை யொழிக்கத் தூண்டுகின்றது. இவ்விதமாய்த் தூண்டப் படுதலினால் சிலர் தமது மனச்சாட்சியை அசட்டை செய்து விட்டு சுயநயங் கருதியும், தமதினத்தோர் நலங்கருதியும், பொறாமை, படாடோபம், அடுத்துக் கெடுத்தல், நய வஞ்சகம், வாக்குபசாரம் முகமன் கூறல் முதலாகிய குணங்களைக் கொள்கின்றனர். இவர்களுக்குத் தான் அடிநாக்கு நஞ்சு, நுனி நாக்கு அமிர்தம் வாய் வாழைம்பழம், கை கருணைக்கிழங்கு. இவர்கள் தான் உண்மையை மறைக்கும் நிமித்தம் பல ஆணைகளிட்டுப் பேசுவர். ஈசனையுமேசுவர். இவர்கள்தான் வெளித்தோற்றத்திற்கு மாத்திரம் அமரிக்கையாயும் முறுவலித்தும், கொண்டாடியும், எங்குமோடியு மிருப்பார். சமயம் வருங்கால் தமக்கு உதவினோரை அந்தரத்தில் விட்டு, அவர்களுக்கும் மற்ற நற்குண முடையவர்களுக்கும் பல பின்னல்களைப் புரிவர். அவர்கள் எஞ்ஞான்றும் கடூர நெஞ்ச முள்ளவராயிருப்பார். அன்றியும் அவர்கள் பிறரைக் கெடுப்பதல்லாமல் தம்மையும் கெடுத்துக் கொள்வர். முடிவில் எவருக்கும் பலனின்றி நாசமடைவர். எனவே 'சத்தியம் வத' சத்தியமே ஜெயம்' என்றவாறு உண்மை பேசி மாட்சிமை யுடையவராயிருக்கவேண்டும். நன்மையை நாடிக் கடைப் பிடிக்க வேண்டும். சத்தியமே தலை காக்கும், சத்தியமே நிலை நிற்கும்.

C S. துரைசாமி.

ரங்கநாயகி

(174-ம் பக்கம் தொடர்ச்சி)

மறுநாள் காலை ரங்கநாயகி வந்தால் அவளைத் தன்னிடம் தனியே அனுப்பும்படி அங்குதன் உத்தரவளித்தான். அப்படியே அவள் வந்த சமையத்தில், "நான் உன்பேரில் காதல் கொண்டிருக்கிறபடியால் நான் சொல்லும் ஏற்பாட்டிற்கு நீ இணங்கினால் குணசீலனை மன்னிப் பேன்," என்றான்.

"இப்படித்தானே என் அண்ணனும் அம்புஜத்தை நேசித்தான்; அதற்கவனுயிரை யிழக்க வேண்டுமென்று நீ ஏன் சொன்னாய்," என்று தைரியமாய் ரங்கநாயகி மறுதளித்தாள்,

அங்கு:- "ஆனால் நான் சொல்வதைக்கேள். அம்புஜம் தன் தந்தை இருப்பிடம்விட்டு யாவருமறியாமல் குணசீலனிடம் சென்றதுபோல் நீயும் செய்ய உடன்படுவாயாகில் குணசீலனை மன்னித்து விடுகிறேன்"

ரங்கநாயகி:— தன் தமையனை உயிரிழக்கும்படித் தண்டித்த அக்குற்றத்திற்கே தன்னையும் மயக்குகிறான் என்பதைப்பற்றி ஆச்சரிய மடைந்து பின் வருமாறு தனக்குள் சொல்லிக் கொண்டாள்—"தமையனுயிரைக் காப்பாற்றுவதற்காக என் உயிரை வேண்டுமானாலும் இழப்பேன். சவுக்கடியின் அடையாளங்களை ஆபரணமாகத் தரித்துக் கொண்டிருப்பேன். உயிரைவாங்கி விடும்படி தண்டிக்கப்பட்டிருந்தபோதிலும், தூக்குமாத்தண்டை மனக் கடுப்பன்றி அதிக ஆவலுடன் செல்வேன். ஆனால் வெட்கங்கெட்ட இந்த உடன்படிக்கைக்கு மாத்திரம் ஆளாகவே மாட்டேன்"

பிறகு அரசப் பிரதிநிதியை நோக்கி, "கண்பம் பொருந்திய அரசே, நீர் இதை பரிகாசமாகச் சொல்லியிருப்பீர் என்று நம்புகிறேன்," என்றாள்.

அங்குதன்.—"ஆகாயவாணி பூமிதேவி சாக்ஷியாக நான் என் மனதிலிருந்ததைத்தான் வெளியிட்டேன்"

ரங்கநாயகி.—"தேவர்கள் சம்மதிக்கக் கூடாத இச்செய்கைக்குத் தேவதைகளை சாக்ஷியம் வைப்பதால், தங்களுக்கு தெய்வபக்தி குறைவு தான். நான் உம்மை அவமானப் படுத்துவேன். இது நிச்சயம். உடனே என் அண்ணனை மன்னித்ததாக ஓர்பத்திரம் எழுதிக் கொடும். இல்லையாகில் நீர் எப்பேர்பட்ட பாதகன் என்பதை வெளியிடுவேன்"

அங்கு:—உன்னையார் நம்புவார்கள், ரங்கநாயகி? மாசற்ற என் பெயரென்ன! பரிசுத்தமான என் ஒழுக்கங்களென்ன “நீ என் மேல் குற்றம் சாட்டினால் நான் சொல்வதை நம்புவார்களா? அல்லது நீ சொல்வதையா? எனக்கு இணங்கி உன் தமையன் உயிரை இரக்ஷி. இல்லையாகில் நாளையதினம் அவன் தூக்கிலிடப்படுவான். நீ உன்னிஷ்டப்படி ஊராரிடம் சொல்லலாம். உன்னை நம்பமாட்டார்கள்.” புன்சிரிப்புடன், “நாளைக்கு,” என்றும்சொன்னான்

(இத்தகைய சம்பாஷணையைத் தொடர்வது தேவநிந்தனையாகும்).

ரங்கநாயகி “நான் எவரிடம் இதை முறையிடுவது? என்னையார் நம்புவார்கள்?” என்று சொல்லிக்கொண்டே ரங்கநாயகிதன் அண்ணனை யடைத்திருக்கும் காராக்ரஹத்தை நோக்கிச் சென்றாள். அவள் அங்கு சென்றபொழுது குணசீலன் சன்னிசாசிவேடம் பூண்ட அரசனிடம் சம்பாஷித்துக்கொண்டிருந்தான். அரசன் அதே வேஷத்தில் அம்புஜத்தையும் பார்த்து அவ்விருவர் மனதையும் தேற்றினபடியால் அவர்கள் செய்த பிழைக்காக அதிக விசனப்பட்டார்கள். அம்புஜம்தான் இந்தப் பிழைக்கு அதிக காரணமானவள் என்றும் ஒத்துக் கொண்டாள்.

ரங்கநாயகி சிறையினுள் சென்றபொழுது, அரசன் “யாரங்கே என்னவேலை யென்று வினவினான். “குணசீலனுடன் இரண்டொரு வார்த்தை சொல்ல வந்த ரங்கநாயகி” என்றுரைத்தாள். அரசன் அவ்விருவரையும் விட்டு, விலகி அவர்கள் பேசுவதை ஒட்டுக்கேட்கும் பொருட்டு தக்க இடம் சென்றான்.

குணசீலன்:—“என் அருமைத்தங்காய். என்ன சமாசாரம்?”

ரங்கநாயகி:—“நாளைக்குத்தூக்குமரம்செல்லத்தயாராகஇருக்க வேண்டியது தான்”

குணசீ:—“ஏன்? பிழைத்திருக்க வழியொன்று மில்லையா?

ரங்க:—"ஆம். அண்ணு ஒருவழிதான் இருக்கிறதுபோலும். நீ அதற்கு இணங்குவாயா? பெருந்தன்மையை இழந்தாவது மனிதன் பிழைத்திருப்பதென்ன பயன்?"

குணசீ:—"நீ சொல்வது இன்னதென்று புலப்படவில்லையே. தெளிவாய்ச் சொல், பார்ப்போம்."

ரங்க:—"குணசீலா, என் அண்ணு. சொல்வதற்கு நடுக்கமாய் இருக்கிறது. உன் பெருந்தன்மை யறியாமல் சாவதைவிட கண்யமிழந்து இன்னுமிரண்டு அல்லது மூன்று வருஷங்கள் உயிருடன் வாழ்வதைவிரும்புவாயோ? சந்தேகமாயிருக்கிறது. நீ சாகத் துணிவாயா? இயமன் நம்மால் மிதிக்கப்படும் ஈக்கும் அதிகபயத்தை உண்டாக்குகிறுனே?"

குணசீ:—"நீ என் என்னை இப்படி லச்சை பண்ணுகிருய்? நான் இளைஞனுயிருந்த போதிலும் என்னுல் வீரியமாய் நடக்க கூடும். நான்சாகவேண்டுமானுல் என்காதலியைத் தழுவுவதைப் போல் சாவையும் தழுவுவேன்."

ரங்க:—நீ யல்லவோ என் அண்ணு. என் தகப்பனுர் பிம்பம் பேசியது போல் தோற்றுகிறது. அவருக்கு நீதான் தக்ககுமாரன். ஆமாம் நீ சாகத்தான் வேண்டும். இது இருக்கட்டும். அண்ணு குணசீலா, நான் சொல்வதை நீ நம்புவாயோ மாட்டாயோ? மனுநீதியறிந்து சாத்மீகிபோல் காட்டிக் கொள்ளும் இந்த அரசப் பிரதிநிதி, அவன் சொல்லும் வெட்கங்கெட்ட ஈன உடன் படிக்கைகளுக்கு நான் இணங்கினுல் உன்னை மன்னிப்பானும். ஆ! அவன் பதிலாகக் கேட்பது என் உயிராயிருந்தாலும், நான் துணிதைக்கும் ஊசியைப்போல் அசட்டை செய்து உயிரை இழப்பேன்."

குணசீ:—"என் பேரில் உனக்கிருக்கும் அன்பைப்பற்றி எனக்கு மிக்க சந்தோஷந்தான்.

ரங்க:—“நாளையதினம் தூக்குமரம் செல்லத் தயாராய் இரு அண்ணா” என்று கண்ணீர் சொரிந்தாள்.

“வெட்கங் கெட்ட வாழ்வு எவராலும் நிந்திக்கவும் வெறுக்கவும் கூடியது.”

குணசீ:—ஆனால் குற்றவாளிகள் சாகும் தருணத்தில் தங்குற்றங்களை எண்ணிப் பயப்படுவதுபோல், குணசீலன் கடைசியாய் சாவின்பயங்காத் தன்மையால் மனங்கலக்கப்பட்டு, “அன்புமிக்கதங்காய் என்னை பிழைத்திருக்க விடு! உடன்பிறந்தோன் உயிரைக்காப்பதின் பொருட்டு செய்யும்பாவம் பாவமா? புண்ணியத்திற்குச்சமானமாகும்” என்று சொன்னான்.

ரங்க:—“அஞ்ஞானமில்லாத பயங்காளி! நாணயங் கெட்ட பாதகன்! உன் உயிரைக் காப்பதின் பொருட்டு உன் தங்கையை அவமானத்திற்கு ஆளாக்குவாயா? ஆகா? சி! சி!! இப்பேர்ப்பட்ட மானபங்கத்திற்கு ஆளாவதைப்பார்க்கிலும் இருபது ஜென்மமெடுத்து, உயிரை இழப்பதே மேல் என்று கொள்ளத்தக்க அவ்வளவு பெருந்தன்மையுள்ளவனென்று நினைத்தேன் அண்ணா”

குணசீ:—இருக்கட்டும் தங்காய். நான் சொல்வதைக் கேள் என்று ஆரம்பித்தான்.

ஆனால் தன் தங்கையின் மானபங்கத்தால் தான் உயிரடைவதைத் தாக்கிச் செல்வதற்குள், அரசன்வந்து“ குணசீலா, நீயும்உன் தங்கையும் பேசியதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அவளை மானபங்கப்படுத்துவது அங்குதனின் எண்ணமல்ல. அவன் சொல்லியதெல்லாம் அவள் பதிவிருதாதன்மையை சோதிப்பதற்காகவே அவள் மானத்திற் கஞ்சி, ‘முடியாது’ என்று சொல்லியது அவனுக்குஅதிக சந்தோஷமேயாகும். அவன் உன்னை மன்னிப்பான் என்று எனக்குச் சிறிதும் தோன்றவில்லை. ஆகையால் கடவுளை வணங்கிவிட்டு காலையில் நடக்கப்போகிறதற்குத் தயாராக இரு” என்றான்.

பிறகு குணசீலன் தன் புத்தியீனத்தால் சொல்லியதைப்பற்றி விசனப்பட்டு, "என் அருமைத்தங்கை ரங்கநாயகியை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். உயிருடன் இருக்க எனக்கிஷ்டமில்லை. என் உயிரை இழக்க நானே விரும்புகிறேன்," என்று உரைத்தான். விசனமும் அவமானமும் அதிகரித்து குணசீலன் அப்புறம் சென்றான்.

அரசன் இப்பொழுது ரங்கநாயகியுடன் தனித்திருக்க, "உன்னை சம்பூர்ண அழகியாய்ச் செய்த தெய்வமே, குணசம்பத்வதியாயும்செய்தது" என்றான். அதற்கவள் "ஆ, அங்குதன் விஷயத்தில் அரசன் எவ்வளவு ஏமாந்து இருக்கிறான். அரசன் எப்பொழுதாகிலும் திரும்பி வந்து, நானும் அவருடன் பேசும்படி நேரிட்டால் அங்குதன் எப்படிப்பட்டவன் என்று சொல்வேன்," என்றாள். அவள் எண்ணியதை இப்பொழுதே அரசனிடம் தெரிவித்து விட்டாள் என்பதை அவள் அறிந்தவளல்ல.

"உன்னால் அதிகம் செய்யமுடியாது. சமாசாரத்தை அவன் எதிர்பார்ப்பான். ஆகையால் நான் சொல்வதைக் கவனத்துடன் கேள். உனக்கு மானபங்கமில்லாமல் குற்றமின்றி வருந்தும் ஓர் ஸ்திரீக்கு உபகாரம் செய்யவும், உன் அண்ணாவின் உயிருக்கு மன்னிப்பை பெறவும் வழி உண்டென்று நான் நம்புகிறேன். நீ இப்படிச் செய்வதினால் அரசன் எப்பொழுது திரும்பி வந்தாலும் இன்பத்தையே அடைவாய்," என்று சந்நியாசி வேடந் தரித்திருந்த அரசன் உரைத்தான். "பிழை யொன்றுமிராத ப[illegible] எது செய்வதிலும் எனக்கிஷ்டந்தான்." என்று ர[illegible] சொன்னாள்.

"கற்புடையோர் ஆண்மை யுடையோர் வெகுளிகளல்ல," என்று சொல்லி, "வீரசூரனென்று பெயர் பெற்ற பாண்டியனின் தங்கை மங்களாவை உனக்குத் தெரியுமா?" என்று வினவினான். "நான் கேள்வியுற்றதுண்டு. உத்தம வாக்கியங்களையே அவள்

பெயருடன் கேட்டிருக்கிறேன்," என்றதின் பேரில் சந்நியாசி வேடம் பூண்டிருந்த அரசன், "இந்த மங்களா சாத்மீகனின் போலித் தன்மைகளையுடைய அங்குதனின் இல்லாள்; இவளையும் பாணிக்கிரகண சீதனங்களையும், அங்குதனிடம் ஒப்புவிக்கும் பொருட்டு பாண்டியன் இங்கு வருகையில், பெயர் பெற்ற தாண்டவராயனைத் தலையாகக் கொண்டக் கள்ள கூட்டத்தார் சீதனங் களைப் பற்றிக்கொண்டதுமன்றி பாண்டியனையும் கொலை செய்து விட்டபடியால், மங்களா தமையனை யிழந்து விசனத்துடன் தனி த்து அங்குதனிடம் வர மாசற்ற அவள் ஒழுக்கத்தின் பேரில் நெறி தவறின சில அக்கிரமமான குற்றங்களைச் சாட்டி, மனையாளாக் கிக்கொள்ள மாட்டே னென்றும் சொல்லி அவளைப்பெற்ரோரிடம் திருப்பி யனுப்பி விட்டான். (இதன் வாஸ்தவகாரணம் அவள் சீதன மின்றி அவனிடம் சென்றதுதான்.) அது முதல் அங்குதன் அவ ளைக் கண்ணெடுத்து கூடப் பார்க்கிறதில்லை. அங்குதனின் நியாய மற்ற இக்கொடுமையான உபசரணை, அவள் அவனிடம் கொண்டி ருந்த பாலைத் தணிக்காததுமன்றி, குறுக்கிடப் பட்டிருக்கும் அணையானது முன்சாந்தமாய் நகர்ந்து கொண்டிருந்த ஆற்றின் நீரைக் கலக்கிவிடுவது போல் அப்ரீதியை அதிகப் படுத்திய தாகையால் இப்பொழுது அவளை முதன் முதல் கொண்ட காதலு டன் நேசிக்கிருன்," என்று சொன்னுன்.

பிறகு அரசன் தெளிவாய்த் தன் உபாயத்தை விவரித்தான். இது, ரங்கநாயகி அங்குதன் தன்னிடம் போய் அவன் உடன் படிக்கைக்கிணங்கி, நடு இரவில் வருவதாகச் சொல்லி, தன்தமை யன் மன்னிப்பை பெறலா மென்றும், இரவினிருளில் மங்களாவை யனுப்பி அங்குதனை ஏமாற்றி விடலா மென்பதுதான். பின் னும், "சாத்மீக குணமுடைய என் புத்திரியே இதைச் செய்வ தற்கு பயப்படாதே; அங்குதன் அவள் கணவன்; இப்படி இருவ ரையுமொன்று சேர்ப்பதில் பாவமொன்றுமில்லை," என்றும் சொல்லலானுன்.

இதனால் மனோரத மடைந்த ரங்கநாயகி சன்னியாசி சொல்லிய படி செய்யப் புறப்பட்டாள்; சன்னியாசியும்—அல்லது இவ்வேடம் தரித்த அரசனும்—மங்களாவிடம் தன் எண்ணங்களை யறிவிக்கச் சென்றான். இதற்கு முன் சந்நியாசி வேடத்துடன் சுகமிலாரிலொருத்தியாகிய அவளுக்கு மதசம்பந்தமான போதனைகளையும் பக்ஷமான தேற்றாவுகளையும் புகட்டியதுண்டு; அப்படிச் செய்யுந் தருணங்களில், பரிதபிக்கத்தக்க, துக்கம் மிகுந்த அவள் சரித்திரத்தை அவள் வாயினின்றே யறிந்தான். இப்பொழுது அவள் இவனைத் தனக்குதவி புரியக் கடவுளால் அனுப்பப் பட்டவனென்று நினைத்து, அவனிஷ்டப்படி நடப்பதாக உடன் பட்டாள்.

(இன்னும் வரும்)
T. M. ராஜகோபாலாசாரி.

சிறு நீதிக்கதைகள்.

பட்டினத்தெலியும் உட்கிராமத்தெலியும்

ஒரு காலத்தில் பட்டினத்தெலி ஒன்று தனக்கு நீண்ட நாளாகசிநேகமாயிருந்த நாட்டெலியைப் பட்டினம்பார்க்கவரும்படி வேண்டிக் கொண்டது. அந்த நகரத்தெலியின் வேண்டுகோளுக்கு இணங்கி உட்கிராமத்தெலி அதன்பின் றொடர்ந்து, நகரத்தெலி வசிக்கும் இராஜஅரண்மனை சென்றது. இரண்டும் சப்தமில்லாத விடங்களில் பகல் முழுவதும் கழித்து, இரவில் பலவிதமான இரத்தினக் கம்பளங்கள் விரித்திருக்கும் அறைகளிலெல்லாம் விருந்தாளியை யழைத்துச் சென்றன. இரவு போஜனமானதும் மிகுதியிருந்ததை திருட இரண்டும் ஆரம்பித்தன. ஆயினும் மனுஷ சஞ்சாரம் கேட்டதும் இரண்டும் ஒளிந்தும், சப்தம் நின்றதும் மறுபடி திருடுவதுமாய் வயிற்றை நிரப்பிக் கொண்டன. பிறகு தனது

சிநேகிதனைப்பார்த்து நகரவாசி, தான்வசிக்கும் மாளிகையையும் அதனுள்ள விசேஷங்களையும், இடப்பட்டிருக்கும் விளக்குகளையும் சிங்காரங்களையும் வர்ணிக்கத் தலைப்பட்டது. இதனை ஒருவாறு கேட்டிருந்த கிராமத்தெலி, "நன்று சொன்னாய்! நமது தொழிலோ திருடுவது. இதிலும் பயங்கரமின்றி யாதொருகாரியமும் செய்யமுடியாமல் ஒளிந்திருந்து செய்வானேன். என்னைப்பார், நான் ஒருவருக்கும் பயமின்றி யதேச்சையாக எங்கு வேண்டுமென்றாலும் திரிகிறேன். எனச் சொல்லி, போதும் உனது உறவு" என்று தன்னிடத்தை நோக்கிச் சென்றது.

இதனால் நாமறிவது என்னவெனில், அவர்களுக்கு அவரவர்கள் வாசஸ்தலங்களும், பழக்க வழக்கங்களும் பிரயோஜனப்படுமே ஒழிய ஒருவருக்குற்றது மற்றொருவருக்கு விசேஷமாகாது. ஆகையால் தமக்கு அநுபவத்தில் விசேஷமானதைக் கொண்டு எல்லோருக்கும் பொருந்துமெனச் சொல்லுவது விசேஷமாகாது.

மனிதனும் பிரதிபிம்பமும்

ஒருவன் தன்னயமுடையவனாய் தன்னைவிட அழகில் இணை ஈடு இல்லையென மதித்து இறுமாந்திருப்பதோடு, தான் அழகுடையவனென்றும், தனது உருவத்தை பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியின் மேல் தன்னை அழகில்லாதவனாகக் காட்டுவதாக கூறி வந்தான். சிறுவர் முதல் விருத்தர் வரையிலும், ஸ்திரீகளை அலங்கரித்துக் கொள்ளும்படி உற்சாகப்படுத்துவதும், ஆடவர்களை காமாதுரர்களாகச் செய்வதும் கண்ணாடி தானே. அவனுக்குத் தெரியுமாயினும் தன்னை அவன் விசேஷமாக நினைத்துக் கொண்டிருந்தபடியால் அவன் வேறு எண்ணம் கொள்ளாதிருந்தான். அதனுடன் நில்லாது பிறரிடமும் பிதற்றிவந்தான். ஒருநாள் ஒரு சிநேகிதனும் இவனுமாகப் போய்க் கொண்டிருக்கையில் கலங்கலின்றி பளிங்கு போன்று தெளிந்து ஓடும் ஒரு சிறு கால்வாயைத்

தாண்ட நேரிட்டது. நீருக்கே வஸ்துக்களை பிரதிபலித்துக் காட்டுங் குணம் உள்ளதோடு, இந்த அருவியின் ஜலமும் தெளிவாயிருந்ததால் அவனுடைய நிழல் அதனில் தோன்றிற்று. அதனைக் கண்டவண் உற்று நோக்கும்போது தனது அழகின்மையை கவனித்தான். ஆனாலும் தன்மனதில் சாத்திய மில்லாதாயிற்று. தன்சிநேகனை நோக்கி கண்ணாடி தான் எனக்கு சத்துருவாக விருப்பதாய் நினைத்தேன். இந்த தெளிந்த நீருருவியும் இப்படிக் காட்டுகிறது. ஆகையால் சாயலைக் காட்டும் எந்தவஸ்துவும் சரியாய்க் காட்டுவதில்லையென்று இதனால் நிச்சயமாகிற தென்றான். அதனைக்கேட்ட நண்பன் அப்படியன்று; கண்ணாடியிலும் குற்றமில்லை. நீருருவியிலும் குற்றமில்லை. நாம் தான் உள்ளத்து கொண்ட எண்ணத்தை பிடிவாதமாகச் செய்வதால் அப்படி நமக்குத் தோன்றுகிறதே ஒழிய வேறில்லை என்று சொன்னான். என்ன சொல்லியும் பிரயோஜனப்படவில்லை.

ஆகையால் தான்கொண்ட கருத்துக்கோ அல்லது எண்ணத்துக்கோ மாறுபாடு மற்றொருவர் சொல்லுவார்களாயின் அவர்கள் சொல்லுவது தவறுதல் என்று கற்பித்துவிடல் கூடாத காரியம் என்பது இதன் படிப்பினை. அகத்தினழகு முகத்திற் றெரியுமென்பது பழமொழி.

திருடர்களும் கழுதையும்

இரண்டு திருடர்கள் கூடி ஒரு கழுதையைத் திருடிச் சென்றனர். கொஞ்சதூரம் சென்றதும் இந்தக் கழுதையை விற்பதா வளர்ப்பதா வென்ற எண்ணமுண்டாயிற்று. இப்படியொருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்பொழுது மூன்றுவதாக ஒரு திருடன்வந்தான். அவன் வந்ததும் இவர்கள் சச்சரவைக்கேட்டு கழுதையண்ணனைத் தான் கொண்டு போகப்பிடித்தான். கழுதை சரிதான். இப்பொழுது இரண்டு பேருக்குள்ளே இப்படி சண்டையுண்டா யிருக்கும் போது மூன்றுவதாக நீயும் கூடினால் நான் யாரிடம் தங்குவதென்பதைத் தீர்த்துவிட்டு அழைத்துப் போ என்றதும் இதனைக்கேட்ட மூன்றுவது திருடன் இதற்குப் பதில் சொல்ல முடியாது விழித்துக் கொண்டிருக்கும்போது, வழியில் வந்த நான்காவது திருடனொருவன் இவைகளையெல்லாம் வரும்

போழுதே யறிந்து இவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி செய்து விட்டுக் கழுதையைத்தட்டி ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

ஆகையால் ஓரே நிதானமில்லாமல் பலர்கூடி பலயோஜனை சொல்லுவார்களாயின் ஒன்றும் நிறைவேறுவதில்லை.

இயமனும் திருப்தியற்றவனும்

ஒரு திருப்தியற்றமனிதன் எப்பொழுதும் தான் கஷ்டப்படுவதாயும், எப்பொழுதுதான் இவ்வுலக வாழ்க்கையைத் துறப்பதோவென்றும் கடவுளைத் தியானித்த வண்ணமாகவே இருந்தான். இவன் ஓயாது ஒழியாது உயிர்வாங்கும் கடவுளான இயமனை வேண்டுவதைப் பார்த்து, மனமிரங்கி இவன் இஷ்டத்தை பூர்த்திசெய்வோமென்று நினைத்து, இயமன் வந்து திருப்தியற்றவன் வீட்டு வாசல் கதவை தட்டவும் திருப்தியற்றவன் கண்டு திடுக்கிட்டு ஐயையோ! இந்த கோரரூபியைப் போகச் செய்யுங்கள். இவன் எதற்காக வந்தான் என்று பிரலாபித்தான். இயமன் அப்பா தினப்படி இடைவிடாது நீ வேண்டினையே அதற்கு மனமிரங்கித் தான் இப்பொழுது வந்தேனென்றான். ஐயோ நான் என்ன செய்வேன்! தங்களைப்பார்த்தால் பயமாயிருக்கிறது. ஆகையால் தாங்கள் இப்பொழுதே இந்த வீட்டைவிட்டு அகலவேண்டும் என்று வேண்டிக் கொள்ள இயமனும், மனிடர் கஷ்டப்படுவதாக நினைத்து அந்தச் சமயம் மனதில் தோற்றுவதையெல்லாம் சொல்லுவது மனிதர் சகஜம் பொலும். திருப்தியாயிருப்பது மனித சுபாவத்துக்கு உள்ளதாயிருக்க அப்படியிருப்பதில்லையானால் கஷ்டப்படுவதாகத்தோன்றுமெனச் சொல்லிச் சென்றார்.

சோம்சுந்தரதேசிகன்

ஜப்பானில் பாய் பின்னுதல்

(பிழைக்கும் வழி)

மதுரை "செந்தமிழ்ப்" பத்திரிகையில் பாய்பின்னும் தொழிலைப் பற்றி ஒரு வியாசம் காணப்படுகிறது. ஜப்பான், கைத்தொழிலின் பலத்

தால் முன்னுக்கு வந்த தேசம். ஐரோப்பாக் கண்டத்திற்கு பிரிட்டன் அதாவது இங்கிலாந்து எப்படியோ, அப்படியே ஆசியா கண்டத்திற்கு ஜப்பான் தேசத்தில் கைத்தொழில் விஷயமாயுள்ள கொள்கைகளை நாம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து, ஜப்பான் மாதிரிகளையும் கைக் கொண்டால் நமது தேசத்துக்கு கைத்தொழில் வெகு சீக்கிரத்தில் அபி விருத்தி யடையும். ஜப்பான்கைத்தொழில்களில் முக்கியமானதிலொன்று பாய் பின்னுந்தொழில். ஒவ்வொரு ஜப்பானிய வீட்டிலும் புருஷர்கள் ஸ்திரீகள், குழந்தைகள் ஆகிய எல்லாரும், வேறு வேலையுள்ளவர்களாயி ருந்தால், ஒழிவகாலங்களிலும் பலர் ஓயாமல் எப்பொழுதும் இத்தொழி லையே செய்துவருகிறார்கள். 1907-ம் வருஷத்தில் ஜப்பானிலிருந்து அயல்நாடுகளுக்கு 8,760,000 ரூபாய் விலை மதிப்புள்ள கோரைப் பாய்கள் எற்றுமதி செய்யப்பட்டன. இதனாலேயே ஜப்பானில் இந்தக்கைத் தொழிலின் அபிவிருத்தி வெளியாகிறது.

இந்தப் பாய்கள் ஒருவித கோரைப் புற்களால் பின்னப் படுகின்றன. இந்தக் கோரைப் புல்லுகள் ஜப்பான் தேசத்து நெல் வயல்களின் ஓரங்க ளில் விசேஷமாய்ப் பயிராகின்றன. இவைகளை ஜப்பானியர்கள் தகுந்த உரம் போட்டு, சாகுபடி செய்கிறார்கள். கோரைப்புல்லுகள் நன்றாய் விளைந்ததும் அவைகளை வெட்டி வெயிலில் காயப்போட்டு, அவைகளின் நீளத்தை அநுசரித்துத் தரவாரியாய்ப் பிரித்து, அவசியமானால் சாயத்தி லேயும் தோய்த்தெடுத்து, தறிகளின் உதவியால் பலவித அலங்காரமான பாய்களைப் பின்னுகிறார்கள்.

உபயோகமற்ற பாய்களை எற்றுமதி செய்துஜப்பான் தொழிற்பெரு மையைக்கெடுத்து விடாமற்படி பார்த்துக் கொள்ள 1905-ம் வூஷத்தில் கவ ர்ன்மெண்டார் அவருடைய முயற்சியால் எற்றுமதி செய்யப்படும் பாய்கள் அநேகமாய் நல்லவைகளாயும் உயர்ந்தவைகளாயும் இருக்கின்றன.

இந்தியாவிலும் பாய் பின்னுந் தொழில் இல்லாமல் போகவில்லை சென்னை ராஜதானியில் தென்னாற்காடு ஜில்லாவில் முக்கியமாய்ப் பறங் கிப்பேட்டை, கடலூர் முதலிய இடங்களிலும், தஞ்சாவூர் ஜில்லா சீர்காழி தாலூகாவிலுள்ள கொள்ளிடக் கரைக்கு இப்புறத்திலுள்ள ஆணிக்காரன் சத்திரம், மதுரைஜில்லாவில் அருக்கர் வாசஸ்தானமாகிய தைக்கால் முத லிய இடங்களிலும், மலையாளத்தில் பாலக்காடு, கள்ளிக்கோட்டை திரு நெல் வேலிக் கடுத்த பத்தமடைபோன்ற சில கிராமங்களிலும், இந்தப்பாய் வேலை வெகு நேர்த்தியாகவும், விதம் விதமாகவும் செய்யப் பட்டுப் பாயொன்று ரூபா50, 60, 100, 150, வரையில் விலையில் மதிப்புப் பெற் றிருக்கின்றன. இந்தப்பாய்களில் பட்டுகள் சேர்த்து வெகு நேர்த்தியாய்ப் பின்னும் மாதிரி மிகுதியும் சிலாகிக்கத் தகுந்தது தினுசுக்குத் தகுந்தாப் போல் விலை மதிப்பேறப்பெற்ற ஒரு மனிதன் படுக்கக்கூடிய அகலமும் நீளமுமுள்ள ஒரு பாயை உள்ளங் கையில் சுருட்டி மடக்கி வைத்துக் கொள்ளும் படியான அந்தஸ்தில் செய்யப் படுவதென்றால் நம் நாட்டுக் கைத்தொழிலைப் பற்றி கேட்பானேன். இந்த அருமையான பாய்களைத் தவிர கிராமங்கள் தோறுமுள்ள நிலங்களின் ஓரங்களில் யாதொரு எருவு

மில்லாலல் தானகவே, ஜலத்தில் வளர்ந்து கிடக்கும் கோரைப் புல்லுகளைக் கொண்டு நம் நாட்டு ஸ்திரீ புருஷர்களும் நேர்த்தியான கோரைப் பாய்களைப் பின்னி வீட்டுபெயோகத்திற்குப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளுகிருர்கள்.

ஆனல் இப்பொழுது சிலவருஷங்களாக இந்தத் தொழிலைக் கவனிப்பாரே கிடையாது. ஜப்பான் கவர்ன்மெண்டாரைப் போலவே நமது கவர்ன்மெண்டாரும் இன்னும்பல முதலாளிகளும் தொழிலாளிகளைச் சேர்த்து இந்தத் தொழிலில் கவனம் செலுத்தி அபிவிர்த்திக்குக் கொண்டுவர எற்பாடு செய்யவேண்டியது அவசிய மென்று நிருபர் எழுதியிருக்கிருர். படுக்கைக்குக் கீழே ஜமக்காளங்களையுமே கம்பளிகளையுமே உபயோகப்படுத்தும் வழக்கமும் அதிகப்பட்டு வருவதால் நிருபர் பேச்சு எறும் என்பது சந்தேக மாகத் தோன்றுகிறது. ஈ. மி

வர்த்தமானங்கள்.

ஸ்திரிகளின் படிப்பைப்பற்றி மிஸ்ஸேஸ் அன்னிபெஸண்டு.

கும்பகோணத்தில் ஸரஸ்வதி பாடசாலை என்றஒரு பெண்பாடசாலையில் பரிசளிக்கும் தினத்தில் அத்தியக்ஷராயிருந்து மிஸ்ஸெஸ் அன்னி பெஸண்டு ஸ்திரீகளின் கல்வியைப்பற்றி வழக்கம் போல் ஒரு பிரசங்கம் செய்தார். மேல்நாட்டு ஸ்திரீகளுக்கும் இந்தியஸ்திரீகளுக்கும் வித்தியாச முண்டு .மேல் நாடுகளில் ஸ்திரீகள் புருஷரைப் போல் பலதொழில்களில் பிரவேசிக்கிருர்கள். அவர்களிற் சிலர் விவாகம் செய்து கொள்ளாமலேகாலந்தள்ளுகிருர்கள். ஹிந்துஸ்ரீகளோ குடும்ப சம்ரக்ஷணையையே பிரதானமாய்க் கொண்டு கிரகணி என்று பேர் வழங்க விருக்கிறவர்கள். இந்தியஸ்திரீ கையும் குழந்தையுமாயிருப்பதைவிடப் பெருமையும் கௌரவமும் இல்லை. அவளே குடும்பத்துக்கு எஜமானி. அவளிடத்தில் சகலருக்கும் மரியாதையும் பக்தியும் உண்டு. புருஷன் வெளியிற்போய் பொருள் தேடிவர, குடும்பத்திலேயே இருந்து அன்ன பூர்ணியாய், அன்னத்தை குடும்பத்தாருக்குப் பங்கிட்டுப்போடுகிருள். ஆகையால் மேல்நாட்டு ஸ்திரீகளுக்குள்ளபடிப்பு இந்தியஸ்திரீகளுக்கு ஒவ்வாது. இந்தியப் புருஷரும் ஸ்திரீகளும்வெவ்வேறு விதமாய்ப் படிப்புப் பெறவேண்டும். பொதுக் காரியங்கள் செய்யப் பிள்ளைகள் தயாராகி வருவது போல் வீட்டுக் காரியங்கள் செய்ய பெண்கள் தயாராக வேண்டும். ஆகையால் பெண்களுக்கு வீட்டுக் காரியங்கள் செய்வதும், சமையல் செய்வதும், சுகாதாரத்தைக் காப்பதும், குழந்தைகளை வளர்ப்பதும், தையல் வேலை பூவேலை செய்வதும் முக்கியமான தொழில்கள். அவைகளுக்குத்தக்க படிப்பு ஸ்திரீகளுக்குக் கிடைக்கவேண்டும். ஸ்திரீகள் இந்தியாவில் ராஜ்யபாரம் செய்துவந்தபடியாலும் அவர்களிற் பலர் உத்தம குணங்களைக்காட்டி வந்ததாலும், அவர்களுடைய சரித்திரத்தை ஸ்திரீகள் படிக்கவேண்டும். இந்தியஸ்திரீகள் குழந்தைப்பருவத்திலேயே பிள்ளைகள் பெற்றுத் தங்களுடைய தேக சௌக்கியத்தையும் பிள்ளைகளுடைய ஆயுளையும் காக்க அசக்தர்களா யிருக்கிருர்கள். சிறுவர்களும் ஸ்கூல்களில் படிக்கும்போதே தகப்பனகி விடுகிருர்கள். இதனல் தேசத்துக்குக் கேடு வருகின்றது ; வயது முதிர்ந்த பிறகு விவாகம் செய்வதே இதற்கு மீட்சி.